**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.234/2022 வா.சா.1ராஜேந்திரன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 14.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என் தந்தை பெயர் சுப்பிரமணிய கவுண்டர் என்றால் சரிதான். என் தந்தை வழி தாத்தா பெயர் நாச்சி முத்து கவுண்டர் என்றால் சரிதான். மேற்படி நாச்சிமுத்து கவுண்டர் கடந்த 2000 ம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டருக்கு என் தந்தை சுப்பிரமணியம் , ராஜாத்தியம்மாள், கோபால்சாமி , சரஸ்வதி ஆகியோர் குழந்தைகள் என்றால் சரிதான். மேற்படி கோபால்சாமியின் மகன்களில் ஒருவர் பழனிச்சாமி என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமி 19-01-2022 அன்று இறந்தார் என்றால் சரிதான். மேற்படி பழனிசாமியின் மனைவி தான் 4 ம் பிரதிவாதி கிருஷ்ணவேணி என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி சுமதி என் தங்கை என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்துக்களும் 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ள சொத்துக்களும் ஆதியில் நாச்சிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர் சொத்துக்களை பாக பிரிவினை செய்த போது வழக்கு சொத்துக்கள் என் தந்தைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தந்தை காலத்திற்கு பிறகு வாரிசு உரிமைப்படி வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் சி.மலையாண்டிப்பட்டிணம் கிராம புல.எண் 208/1ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

3) மேற்படி கோபால்சாமிக்கு பாக பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் பழனிசாமிக்கு உரிய பாகம் தற்போது 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி பாக பிரிவினையின் போது தென்வடல் பிரதான சாலையில் இருந்து மேற்கு நோக்கி எங்கள் அனைவரின் பாகத்திற்கும் செல்லும் விதமாக வண்டித்தட பாத்தியம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வண்டித்தடம் தொடர்பாக பொள்ளாச்சி முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 189/2020 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) மேற்படி பாக பிரிவினையின் படி எனக்கு உரிய சொத்தையும் வண்டிதடத்தையும் அனுபவிப்பது மட்டுமல்லாமல் 4 ம் பிரதிவாதிக்கு உரிய சொத்தையும் , வண்டிதடத்தையும் நான் ஆக்கிரமித்து உள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் ஆக்கிரமிப்பு அளவை அளந்து அடையாளம் காண 4 ம் பிரதிவாதி நில அளவையர் கொண்டு அளக்க முற்பட்ட போது நான் அவரை தடுத்தேன் என்றால் சரியல்ல. நான் என் வழக்குமூலத்தில் 4 ம் பிரதிவாதி ரவுடிகளுடன் இடத்தை அளக்க வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அளக்க உரிமை உள்ளது என்றும் நான் அவர் சொத்துக்களை அளப்பதை தடுக்கவே பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் 4 ம் பிரதிவாதி தன் இடத்தை அளக்க தடுக்கவில்லை.

4) வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தை நான் மட்டுமே ஏற்படுத்தி பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ. 1 ஆவணம் ஒரு தலைபட்ச ஆவணம் என்றால் சரிதான். நான் என் சுவாதீனத்தை காட்டும் விதமாக நீதிமன்றத்தில் அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக நான் கூறியுள்ள நிலையில் அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன் .

அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு வழக்குமூலமே இல்லை என்றால் சரியல்ல. எவ்வித அடிப்படை ஆவணமும் இன்றி 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**ஒப்பம்** /- ( **மு.ச.ஸ்ரீநாத்**)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி